முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 51 - நாடகமும் அரங்கியலும்

### புதிய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# 51 - நாடகமும் அரங்கியலும் 1,11

## புதிய
## பாடத்திட்டம்

**புள்ளியிடும் திட்டம்**

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது,
வினாப்பத்திரம் -I, வினாப்பத்திரம் -II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I இல் 40 வினாக்களையும் பகுதி IIஇல் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I இன் 40 வினாக்களும் **கட்டாய வினாக்களாகும்**. சரியான விடையை இனம் கண்டு விடைத்தாளில் அதற்குரிய கூட்டில் புள்ளடி இடுதலாகும்.

வினாப்பத்திரம் - I

பகுதி – I 40 வினாக்களுக்கு $40 \times 1 = 40$ புள்ளிகள்

பகுதி - II 07 வினாக்களையுடையது.
இவ் வினாத்தாளில் 07 வினாக்களில் **முதலாம் வினா கட்டாயமானது.** ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும்.

$5 \times 12 = 60$ புள்ளிகள்

வினாப்பத்திரம் I ,II

பகுதி - I 40 புள்ளிகள்

பகுதி – II 60 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்.**

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

**மொத்தம்** ⟶ ☐ 10/15

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு **Total Marks** [illegible] புள்ளிப் பட்டியலில் "
வினாப்பத்திர[illegible] தனித்தனியாக
புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I,II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

නාට්‍ය හා රංග කලාව I, II
**நாடகமும் அரங்கியலும் I, II**
Drama and Theatre I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## நாடகமும் அரங்கியலும் I

**கவனிக்க:**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலை வடிவம்
(1) ஓவியம் (2) சிற்பம் (3) கட்டடம் (4) நாடகம்

**2.** கூத்து நிகழ்த்துவதற்கான 'களரி' அரங்கில் பார்ப்போர்
(1) ஒரு பக்கம் இருப்பர் (2) இரண்டு பக்கமும் இருப்பர்
(3) நான்கு பக்கமும் இருப்பர் (4) சுற்றிவர இருப்பர்

**3.** 'ஆடும் வீடும்' எனும் அரங்க விளையாட்டு
(1) உடற்பயிற்சிக்கானது (2) உளப்பயிற்சிக்கானது
(3) குரற்பயிற்சிக்கானது (4) கருத்தூன்றற் பயிற்சிக்கானது

**4.** சிறுகதை ஒன்றிற்கும் நாடக ஆற்றுகை ஒன்றிற்குமிடையிலான பிரதான ஒருமைப்பாடு
(1) கூட்டாக இரசிக்கப்படுவது (2) வாசிக்கப்படுவது
(3) படர்க்கை நிலையில் சொல்லப்படுவது (4) பாத்திரங்கள் காணப்படுவது

**5.** நாடக எழுத்துருவை நாடக ஆற்றுகையாக படைப்பாக்கம் செய்பவர்
(1) மேடை முகாமையாளர் (2) தயாரிப்பாளர்
(3) நெறியாளர் (4) பார்ப்போர்

**6.** மேல்வரும் கூற்றுக்களுள் உடற் தளர்வுப் பயிற்சி தொடர்பான **தவறான** கூற்று
(1) உடலைத் தளர்த்த உள்ளமும் தளர்வடையும்.
(2) பாத்திரமேற்று நடிக்க மிக அவசியமானது.
(3) சித்திரிப்புப் பணியை சிறப்பாகச் செய்ய முடியும்.
(4) குரலை வெளித்தள்ளவும் இலகுவானதாக அமையும்.

**7.** "தனம் தனம் தனதானா அண்டம் உலாவிய மாவில்..." என வரும் முயிற்று வசந்தன் பாடல்
(1) முல்லைத்தீவிற்குரியது. (2) யாழ்ப்பாணத்திற்குரியது.
(3) மட்டக்களப்பிற்குரியது. (4) மன்னாரிற்குரியது.

**8.** "நாடக எழுத்துரு ஒன்றை வாசிக்கும் போது வாசிப்பு அரங்க நுட்பங்களுடன் வாசிக்க வேண்டும்." பின்வரும் கூற்றுக்களில் வாசிப்பு அரங்க நுட்பம் **அல்லாத** ஒன்று
(1) பாத்திரத்தின் பண்புகளை உணர்ந்து வாசிப்பது.
(2) குரலில் ஏற்ற இறக்கத்துடன் வாசிப்பது.
(3) ஓர் இடத்தை விட்டு அசைந்து அசைந்து வாசிப்பது.
(4) சொல்லாடலிற்கு அழுத்தம் கொடுத்து வாசிப்பது.

**9.** குளுர்த்திச் சடங்கு நிகழ்த்தப்படுவதன் நோக்கம்
(1) குழந்தை வரம் கிடைப்பதற்காக ஆகும்.
(2) கருவளம் வேண்டியும் விவசாயம் சிறக்கவும் ஆகும்.
(3) அம்மனை குளிர்ச்சிப்படுத்தவும் வெப்ப நோயை தணிக்கவும் ஆகும்.
(4) திருமணம் இனிதே நிறைவேற வேண்டும் என்பதற்காக ஆகும்.

**10.** மேல்வருவனவற்றுள் சடங்கிற்கும் நாடகத்திற்கும் உள்ள ஒற்றுமைகளில் ஒன்று **அல்லாதது**
(1) நம்பிக்கை (2) நேரக்கட்டுப்பாடு
(3) கற்பனைப் பாவனை நிலை (4) ஒப்பனை

**11.** சிங்கள சடங்காற்றுகைகளுள் ஒன்றான 'ரட்டயக்கும' நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) சன்னியக்கும வீதிய (2) பூங்குடில் (3) தானயம்பல (4) கறலிய

**12.** நாட்டார் ஆற்றுகைக் கலை வடிவமான 'பறை மேளக் கூத்து' பெரும்பாலும் ஆடப்பெறும் பிரதேசம்
(1) மட்டக்களப்பு (2) யாழ்ப்பாணம் (3) மன்னார் (4) மலையகம்

**13.** கூத்தொன்றில் 'காலமேற்றுதல்' எனும் ஆடல் வகை இடம்பெறுவது
(1) பாத்திர வரவினை அறிவிக்கும் போது ஆகும்.
(2) நடிகர்கள் அரங்கை விட்டு போகும்போது ஆகும்.
(3) நடிகர்கள் அரங்கில் சந்திக்கும்போது ஆகும்.
(4) நடிகர்கள் அரங்கில் தர்க்கிக்கும்போது ஆகும்.

**14.** தெம்மாங்குப் பண்புடைய லாவணிப் பாடல்கள் அதிகமுள்ள கூத்து
(1) கோவலன் கூத்து (2) காமன் கூத்து (3) வடமோடிக் கூத்து (4) தென்மோடிக் கூத்து

**15.** "கொஞ்சும் கிளி, குருவி, மைனாவே நீங்கள் கூட்டமாய் இங்கே வராதீர்" எனும் பாடல் இடம்பெறும் இசை நாடகம்
(1) பூதத்தம்பி (2) பக்த நந்தனார் (3) வள்ளி திருமணம் (4) அரிச்சந்திரா

**16.** மேல்வருவனவற்றுள் இசை நாடகத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட விடயங்களுள் **அடங்காத** தொகுதி,
(1) படச்சட்ட மேடை மற்றும் கொட்டகை அரங்குகள்
(2) வாயு விளக்குகள் மற்றும் வர்ணம் தீட்டப்பட்ட காட்சித்திரைகள்
(3) ஆடுதலும் ஆட்டக் கோலமும் என்கிற நடிப்பு முறை
(4) பாடுதலும் நடித்துலுமென்ற செழுமையான நடிப்பு முறை

**17.** நிலைக் கண்ணாடி, தையல் இயந்திரம், சாய்மனைக் கதிரை போன்ற பொருட்களை ஆரோடு நோகேன் நாடகத்திற்காக பயன்படுத்தும் காட்சியாக அமைவது
(1) சுபத்திரா, தாய் தந்தையர் தேன்றும் முதலாவது காட்சி
(2) சீலா, ரஜிவ், தாய் தந்தையர் தோன்றும் காட்சி
(3) அம்பிகை, ஆரணி, தாய் தந்தையர் தோன்றும் காட்சி
(4) மூன்று குடும்பங்களும் இணையும் திருமணக் காட்சி

**18.** மேல்வருவனவற்றுள் நாடகத்தின் துணைக் கலைகளில் ஒன்றாகிய மேடைப் பொருட்கள் பயன்படுத்துவதன் நோக்கங்களில் ஒன்று **அல்லாதது**
(1) பாத்திரங்களில் சமூக அந்தஸ்தைப் புலப்படுத்துவதாக அமைதல்.
(2) இலகுவாக நகர்த்தக் கூடியதாக அமைதல்.
(3) அரங்க வெளியில் அழகியல் தோற்றத்தை ஏற்படுத்துவதாய் அமைதல்.
(4) உயர் சமூக அந்தஸ்த்தை வெளிப்படுத்துவதாய் அமைதல்.

**19.** பாத்திரமொன்றின் பால், வயது, தோற்றம் என்பன
(1) பௌதீகப் பண்புகள் எனப்படும். (2) உளவியற் பண்புகள் எனப்படும்.
(3) சமூக குணாம்சங்கள் எனப்படும். (4) இயல்பிசைக் குணாம்சங்கள் எனப்படும்.

**20.** ஆரோடு நோகேன் நாடகத்தில் வரும் 'ராஜ்குமார்' பாத்திரத்தின் இயல்புகளில் ஒன்று **அல்லாதது** எனக் கருதக்கூடியது
(1) தோற்றத்தில் நேர்த்தியாக இருப்பவர். (2) தான் எண்ணுவதே சரி என நினைப்பவர்.
(3) பிள்ளைகளில் அக்கறையற்றவர். (4) போலி கௌரவம் பார்ப்பவர்.

**21.** நடிகர் தெரிவு மற்றும் நடிபாகமளித்தல் பணிகளில் ஈடுபடுபவர்
(1) நாடகாசிரியர் (2) தயாரிப்பாளர் (3) நெறியாளர் (4) முகாமையாளர்

**22.** தயாரிப்பாளர் தனது பணிகளை திறம்பட மேற்கொள்ள அவருக்கு மிக அவசியமான தகைமைகளில் ஒன்று
(1) நெறியாள்கைத் திறன் (2) நிதி நிர்வாகத் திறன்
(3) நடிப்புத் திறன் (4) நாடகமெழுதும் திறன்

**23.** காட்சி விதானிப்பு யதார்த்த நாடகங்களில்
(1) உள்ளது உள்ளபடியே காட்டும். (2) ஆடம்பரமானதாகக் காட்டும்.
(3) குறியீட்டுப் பாங்கானதாக இருக்கும். (4) சீனறிகள், சோடனைகள் கொண்டாத இருக்கும்.

**24.** பாரம்பரிய மரபு வழி வடமோடிக் கூத்தில் பயன்படுத்தப்படும் தோற்கருவி வாத்தியம்
(1) மிருதங்கம் (2) பறை (3) தபேலா (4) மத்தளம்

**25.** மேல்வருவனவற்றுள் 'மோடிமை நாடகம்' எனக் கொள்ளத்தக்கது
(1) எந்தையும் தாயும் (2) செஞ்சேற்றுக்கடன்
(3) ஆரோடு நோகேன் (4) நம்மைப் பிடித்த பிசாசுகள்

**26.** மேல்வருவனவற்றுள் பொட்டொளி பற்றிய **தவறான** கூற்று
(1) நிரந்தரமான அகல்கோண ஒளியைத் தருவது.
(2) புள்ளிக்குவியமுடைய விளக்கு ஆகும்.
(3) அசையும் பொட்டொளி, நிலையான பொட்டொளி என இருவகைப்படும்.
(4) மேடையில் குறிப்பிட்ட இடத்தில் அடர்த்தியான ஒளிக்கற்றைகள் மூலம் வெளிச்சத்தை வழங்குவது.

**27.** நடிப்பதைப் பார்த்து பார்ப்போருக்கு ஏற்படும் வெளிப்பாடு கிரேக்கத்தில் அழைக்கப்படுவது
(1) ரச எனவாகும். (2) யூஜின் எனவாகும்.
(3) கதாசிஸ் எனவாகும். (4) மெய்ப்பாடு எனவாகும்.

**28.** நடிகர் ஒருவரை பாத்திரம் ஒன்றிற்காக தெரிவு செய்யும் திறந்த தெரிவு என்பது
(1) பலர் முன்னிலையில் ஒருவரைத் தெரிவு செய்தல்.
(2) ஒருவரைத் தனியே அழைத்து தெரிவு செய்தல்.
(3) நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்தல்.
(4) ஒரு பாத்திரத்தின் ஊடாக இன்னொரு பாத்திரத்தை தெரிவு செய்தல்.

**29.** யதார்த்தம் சாரா நாடகமொன்றில் புரட்சிப் பெண் ஒருவரின் வேட உடைக்குப் புரட்சியைக் காட்ட
(1) வெள்ளை நிற உடையும் பச்சை நிற மேற் சட்டையும் அணியலாம்.
(2) சாம்பல் நிற உடையும் செம்மஞ்சள் நிற மேற்சட்டையும் அணியலாம்.
(3) நீல நிற உடையும் பச்சை நிற மேற்சட்டையும் அணியலாம்.
(4) பச்சை நிற உடையும் நீல நிற மேற்சட்டையும் அணியலாம்.

**30.** படச்சட்ட அரங்கொன்றில் 'அதி முதன்மையான பகுதிகள்' என அழைக்கப்படுவன
(1) U.R, U.L (2) CR, CL (3) DC, DR (4) CL, UC

**31.** 'ஏகலைவன்' எனும் நாடகத்தின் ஆசிரியர்,
(1) கலைச்செல்வன் (2) இளைய பத்மநாதன் (3) கந்தவனம் (4) பேக்மன் ஜெயராசா

**32.** நடிகர் வரவு, வெளியேறுகை, இசை ஆகியவற்றைக் கொண்டு ஒளி நினைவுக்குறிப்பு எழுதப்படுவது
(1) வரிக்குறிப்பு (2) செயற்பாட்டுக்குறிப்பு (3) நேரக்குறிப்பு (4) ஒலிக்குறிப்பு

**33.** 'புதியதொரு வீடு' நாடகத்தில் மாயன், மன்னவனை முதலில் சந்திக்கும் இடம்
(1) மீன் சந்தை (2) கடற்கரை (3) குடியிருப்பு (4) கோவில்

**34.** மேல்வரும் நாடகங்களுள் கவிதைப் பாணியும் மோடிமைப் பாணியும் கொண்டமைந்த நாடகங்கள்
(1) சங்கிலி, தவறான எண்ணம் (2) பஞ்சவர்ண நரியார், தப்பிவந்த தாடி ஆடு
(3) புதியதொரு வீடு, கோடை (4) எந்தையும் தாயும், ஆரோடு நோகேன்

**35.** 'மன்னார் மாந்தோட்ட நாடகங்கள்' எனும் அரங்க ஆய்வு நூலை வெளியிட்டவர்
(1) அருட்திரு. டேமியன் அடிகள் (2) பேராசிரியர் அருட்திரு. பிலேந்திரன் அடிகள்
(3) பேராசிரியர் அருட்திரு. மரிய சேவியர் அடிகள் (4) அருட்திரு. செ. அன்புராசா அடிகள்


**36.** மேல்வரும் 'புதியதொரு வீடு' நாடகத்திலிருந்து வரும் உரையாடல்களை அவதானித்து விடையளிக்குக.

A - சாணம் இருக்கு.
B - தடுக்கெங்கே?
C - பூ எங்கே? வேணுமே வழைப்பழங்களும் வெற்றிலையும்? ஊதுபத்தி?
B - உண்டு:
C - சரி, ஓர் இலை விரித்துச் சோற்றைப் படையன்
A - சொதியும் எடுக்கவே?

இவ்வுரையாடலில் பங்கேற்கும் பாத்திரங்கள் A, B, C என்பன முறையே
(1) மன்னவன், மாசிலன், மாயன் (2) கண்ணாத்தை, மாசிலன், மறைக்காடர்
(3) மயிலி, மாசிலன், கண்ணாத்தை (4) மறைக்காடர், மயிலி, மன்னவன்

**37.** 'ஆரோடு நோகேன்' நாடக எழுத்துருவை நூலுருவில் வெளிக்கொணர்ந்த அமைப்பு
(1) பண்பாட்டு மலர்ச்சிக்கூடம் (2) அரங்க முற்றம்
(3) ஆடுகளம் (4) அரங்க ஆய்வுகூடம்

● A, B, C ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள படங்களை ஆதாரமாகக் கொண்டு இலக்கம் **38** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.


A


B


C

**38.** படம் A இனால் காட்டப்பட்டுள்ள சிங்கள நாடக மரபு குறிப்பது
(1) தொவில் (2) கோலம (3) சொக்கறி (4) ரட்டயக்கும

**39.** படம் B இனால் காட்டப்பட்டுள்ள காட்சி குறிக்கும் நாடகம்
(1) அரிச்சந்திரா மயான காண்டம் (2) வள்ளி திருமணம்
(3) பூதத்தம்பி (4) ஏழு பிள்ளை நல்ல தங்காள்

**40.** படம் C இனால் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்
(1) பேராசிரியர். க. கணபதிபிள்ளை (2) பேராசிரியர். சு. வித்தியானந்தன்
(3) கலையரசு. க. சொர்ணலிங்கம் (4) கலைப்பேரரசு. ஏ. ரி. பொன்னுத்துரை

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසායි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 51 | විෂයය<br>பாடம் | நாடகமும் அரங்கியலும் |
|---|---|---|---|

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 4 | 35. | 4 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 1 | 38. | 3 |
| 1 2 09. | .............. | 1 19. | .............. | 29. | .............. | 39. | .............. |
| 10. | 2 | 20. | 3 | 30. | 3 | 40. | 3 |

විශේෂ උපදෙස් } එක් පිළිතුරකට ලකුණු **01** බැගින்
விசேட அறிவுறுத்தல் } ஒரு சரியான விடைக்கு **01** புள்ளி வீதம்

**මුළු ලකුණු** / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව**
சரியான விடைகளின் தொகை

$\frac{25}{40}$

**I පත්‍රයේ මුළු ලකුණු**
பத்திரம் I இன் மொத்தப்புள்ளி

$\frac{25}{40}$

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**51 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

නාට්‍ය හා රංග කලාව **I, II**
**நாடகமும் அரங்கியலும் I, II**
Drama and Theatre **I, II**

## நாடகமும் அரங்கியலும் II

* **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) கட்புல - செவிப்புல கலைகளில் **ஒன்றைப்** பெயரிடுக. (01 புள்ளி)

(ii) குரற் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டுக்களில் **ஒன்றைத்** தருக. (01 புள்ளி)

(iii) ஒளி விதானிப்பில் 'மங்கலாக்கி' எனப்படுவது யாது? (01 புள்ளி)

(iv) 'கதவு அடித்துப்பாடுதல்' எனும் நிகழ்வுடன் தொடர்புடைய சடங்கு எது? (01 புள்ளி)

(v) 'புலசந்தோர்' எனப்படும் கூத்தினை அறிமுகம் செய்யும் பாத்திரம் இடம்பெறும் கூத்து மரபு யாது? (01 புள்ளி)

(vi) காமன் கூத்தைப் பழக்கி மேடையேற்றுபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? (01 புள்ளி)

(vii) நாடகமொன்றில் காட்சிகளையும் பொருட்களையும் ஒழுங்குபடுத்திக்கொள்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? (01 புள்ளி)

(viii) ஈழத்துச் சங்கரதாஸ் என அழைக்கப்பட்ட நாடகக் கலைஞர் பெயர் யாது? (01 புள்ளி)

(ix) கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களினால் அளிக்கை செய்யப்பட்ட **இரண்டு** ஆற்றுகைக் கலை வடிவங்கள் பெயர்கள் தருக. (02 புள்ளிகள்)

(x) நடிகர் ஒருவர் வேடமுகம் ஒன்றை அணிவதன் நோக்கங்கள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

**2.** (i) நாடகக் கலையின் பிரதான இயல்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) இலக்கியக் கலை, இசைக்கலை, நடனக்கலை என்பவற்றின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்கூறி அவை எவ்வாறு நாடகத்திலிருந்து வேறுபடுகின்றன என்பதையும் விளக்குக. (09 புள்ளிகள்)

**3.** (i) சித்திரிப்புமுறைகளில் 'ஊமச் சித்திரிப்பு' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) ஊமச் சித்திரிப்பு எவ்வாறு வேறு சித்திரிப்பு முறைகளில் இருந்து வேறுபடுகின்றது என விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) 'பாத்திரச் சித்திரிப்பு' என்றால் என்ன என்பதையும் அச்சித்திரிப்பில் நால்வகைச் சித்திரிப்புகளும் பயன்படும் முறையை விளக்குக. (06 புள்ளிகள்)

**4.** (i) நாடக எழுத்துரு ஒன்றில் காணப்பட வேண்டிய அடிப்படை அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கதை ஒன்றினை நாடகமாக்கும் போது கையாளும் நுட்பமுறைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான விழிப்புணர்வு நாடகமொன்றை எழுதுங்கள் (5 நிமிடத்திற்குரியது) (05 புள்ளிகள்)

**5.** 'ஆரொடு நோகேன்' எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விடையளிக்குக.

(i) நாடகத்தின் கரு (02 புள்ளிகள்)

(ii) நாடகத்தின் கதை (02 புள்ளிகள்)

(iii) பாத்திரப் படைப்பு

(அ) அம்பிகை (04 புள்ளிகள்)

(ஆ) ஷங்கரி (04 புள்ளிகள்)

**6.** (i) மரபு வழி நாடகங்கள் எனக் கொள்ளப்படும் கூத்தின் இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூத்துக்கள் பற்றி குறிப்புக்கள் எழுதுக.

(அ) காத்தவராயன் கூத்து

(ஆ) வசந்தன் கூத்து

(இ) காமன் கூத்து

(ஈ) கோவலன் கூத்து

(08 புள்ளிகள்)

**7.** நவீன தமிழ் நாடக மரபின் பின்வரும் ஆளுமையினர் பற்றிய குறிப்புக்களை விவரிக்குக.

(i) பேராசிரியர். க. கணபதிபிள்ளை (04 புள்ளிகள்)

(ii) அ. தாசீசியஸ் (04 புள்ளிகள்)

(iii) க. பாலேந்திரா (04 புள்ளிகள்)

***

# நாடகமும் அரங்கியலும் II

**1. சுருக்கமான விடை தருக.**

i. **கட்புல செவிப்புலக் கலைகளில் ஒன்றைப் பெயரிடுக?**

- நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம். (01 புள்ளி)

ii. **குரல் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டுக்களில் ஒன்றைத் தருக?**

- குலைகுலையாய் முந்திரிக்காய் , சங்குவெத்தில சருகுவெத்தில
- சங்கிலி புங்கிலி கதவைத் திற , கோழிக்கோட்டான், நாரை நாராய் (01 புள்ளி)

iii. **ஒளி விதானிப்பில் மங்கலாக்கி எனப்படுவது யாது?**

- மங்கலாக்கி ( தணிகருவி ) (Dimmer) என்பது ஒளியைக் குறைப்பதற்கும் அதிகரிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பெறும் ஒரு கருவியாகும். (01 புள்ளி)

iv. **கதவு அடித்துப் பாடுதல் எனும் சடங்குடன் தொடர்புடைய சடங்கு எது?**

- வேட்டைத் திருவிழா (01 புள்ளி)

v. **புலசந்தோர் எனப்படும் பாத்திரம் அறிமுகம் செய்யும் கூத்து மரபு எது?**

- வடபாங்கு (மன்னார்) (01 புள்ளி)

vi. **காமன் கூத்தை பழக்கி மேடையேற்றுபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

- காமன் மாஸ்டர், காமண்டி வாத்தியார (01 புள்ளி)

vii. **நாடகம் ஒன்றில் காட்சிகளையும் பொருட்களையும் ஒழுங்குபடுத்திக் கொள்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

- மேடை முகாமையாளர (01 புள்ளி)

viii. **ஈழத்துச் சங்கரதாஸ் என அழைக்கப்பட்ட நாடகக் கலைஞர் யார்?**

- எம்.வி.கிருஸ்ணாழ்வார (01 புள்ளி)

ix. **கணபதிப்பிள்ளை ( சின்னமணி ) அவர்களினால் அளிக்கை செய்யப்பட்ட இரண்டு ஆற்றுகைக் கலை வடிவங்களின் பெயர்கள் தருக?**

- வில்லுப்பாட்டு
- இசை நாடகம் (02 புள்ளிகள்)

x. **நடிகர் ஒருவர் வேடமுகம் ஒன்றை அணிவதன் நோக்கங்கள் 2 தருக?**

- ஒரு நாடகத்தில் பல பாத்திரங்களை ஏற்பதற்கு.
- குறியீட்டுத் தன்மையை வெளிக்கொணர்வதற்கு.
- மோடியை வெளிப்படுத்த
- பாத்திரப் படிமத்தை நிலைநிறுத்த.
- குறித்த ஒரு உணர்ச்சியை உறைநிலையில் தருவதற்கு.
- பெருங்காட்சிப் பண்பை வெளிப்படுத்த.

வேறு பொருத்தமான விடைகளையும் பரிசீலித்து புள்ளிகள் வழங்கலாம். (02 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

2. i. **நாடகக் கலை வடிவத்தின் பிரதான இயல்புகள் மூன்றைக் குறிப்பிடுக?**

- நாடகம் செய்கை நிலையில் சித்திரித்துக் காட்டுவதாகும்.
- மனித மோதுகைகளை சித்திரிப்பதாகும்.
- கட்புல செவிப்புல கலைவடிவமாக அமையும்.
- ஆற்றுகைக் கலை வடிவமாகும்.
- கூட்டுக் கலை வடிவமாகும்.
- அடிப்படையில் கட்புலம் சார்ந்தது.
- வெளியில் நிகழ்த்தப்படுவது.
- நடிகரை முதன்மையாகக் கொண்ட கலை.
- கணத்துக்குக் கணம் மாறும் தன்மை கொண்டது.
- போலச் செய்து காட்டும் கலை.
- வாழும் தன்மை கொண்டது.
- காலக்கலையாக விளங்கும்.
- ஒன்றிணைதல் தன்மை கொண்டது.
- ஐதீகங்களை வெளிப்படுத்திக் காட்டும்.
- மீளச் செய்து காட்டும் கலை.

வேறு பொருத்தமான விடைகளையும் பரிசீலித்து மூன்றைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள் வழங்கலாம்.

(03 புள்ளிகள்)

ii. **இலக்கியக்கலை, இசைக்கலை, நடனக்கலை என்பனவற்றின் தனித்துவமான பண்புகளை எடுத்துக்கூறி அவை எவ்வாறு நாடகத்தில் இருந்து வேறுபடுகின்றன என்பதை விளக்குக.**

**இலக்கியம்**

- மொழியை ஊடகமாகக் கொண்ட கலை வடிவம்.
- மனிதனின் கற்பனைத் திறனையும் ஆக்கச் செயற்பாட்டையும் வேண்டி நிற்கும். கலை வடிவம்
- செய்யுள் வடிவிலேயோ உரை நடை வடிவிலேயோ காணப்படும்.
- படைப்பாளியின் மன வெளிப்பாடுகள் வரிவடிவத்தினூடாக வாசகரிடத்தே கொண்டு செல்லும் கலை வடிவம்.

- ஆக்கும் கலைவடிவம்
- கலைஞரிடமிருந்து [illegible]

| நாடகம் | இலக்கியம் |
|---|---|
| • ஆற்றுகைக் கலைவடிவம் | |
| • [illegible] பிரித்தெடுக்க முடியாது | |
| • குறுகியகால வாழ்வுடையது | • நீண்டகால வாழ்வுடையது |
| • அரங்கினூடாக வெளிப்படுத்தப்படும் | • மொழிவடிவில் வெளிப்படுத்தப்படும் |
| • தனியொருவரால் சாத்தியப்படாது | • தனியொருவரால் சாத்தியப்படும் |
| • அவைக்காற்றுக்கலை | • வாய்ச்சொற்கலை |
| • செய்கை நிலையே அதன் பிரதான ஊடகமாக கருதப்படுகிறது. மனித வாழ்க்கையில் நடைபெறும் செயல்களை சித்திரிப்பதாகும் | • மொழியின் மூலமே காலம்,இடம், வெளிப்படுத்தும் செய்தி என்பன எடுத்துரைக்கப்படுகின்றன |
| • நாடகத்தினை ரசிப்பதற்கு மொழி பற்றிய அறிவு அவசியமில்லை செய்து காட்டுவதனால் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய கலை வடிவமாக அமைகிறது. | • இலக்கியத்தினை வாசித்து விளங்கிக் கொள்ள மொழியறிவு அவசியமாகும். படிப்பறிவு உள்ளவர்களால் மாத்திரமே சாத்தியமாகும். |
| • கூட்டாகவே நுகரமுடியும் ஏனெனில் நாடகம் தனியொருவருக்கு காண்பிக்கப்படுவதில்லை | • இலக்கியத்தினை ஒவ்வொரு நபரும் தனித்தனியே நுகரமுடியும் |
| • நாடகம் பார்ப்போரை அடிப்படையாகக் கொண்டது | • இலக்கியம் வாசகரை அடிப்படையாகக் கொண்டது |

**இசை**

- இசை உயிரோட்டமான ஒரு கலையாகும்.
- இசைப் பாடலுடன் இசைவாத்தியங்களும் இணைத்து ஆற்றுகை செய்யப்படும்.
- தனியே இசைவாத்தியங்களின் ஒலிப்பாகவும் நிகழ்ச்சிகள் காணப்படும். ( பல்லியம், நாதசுரக்கச்சேரி) தனியாள் பாடுவதாகவும் குழுவாகவும் இசைக்கச்சேரிகள் ஒழுங்குபடுத்தப்படும். ( தனிக்கச்சேரி, இசைககுழு)
- நாடகத்திற்கான இசை பல்வேறு வகைகளில் பயன்படுகிறது.
  - பாடல்களாக (தனி, கூட்டு)
  - பின்னணி இசையாக.
  - குறியீட்டு மற்றும் மனநிலை இசையாக.
  - அசைவுகளிற்கானதாகப் பிரயோகிக்கப்படுகின்றது.

| நாடகம் | இசை |
|---|---|
| • கட்புல செவிப்புலக் கலை | • செவிப்புலக் கலை |
| • உரையாடலும் உரை சார்ந்த செய்கையும் முக்கியம் பெறும் | • இசை நிகழ்ச்சிகளின் பிரதான ஊடகம் |
| • நால்வகைச் சித்திரிப்புக்களும் இடம்பெறும் | • குரல் வழிச் சித்திரிப்பு முக்கியம் பெறும் |
| • பாத்திரத்திற்கேற்ப வேடவுடை ஒப்பனையுடன் நிகழ்த்துவர் | • கவர்ச்சியான வேடவுடை ஒப்பனை காணப்படும் |
| • ஆற்றுகையின்போது மேடைப் பயன்பாடு முக்கியம் பெறும் | • மேடைப் பயன்பாடு முக்கியம் பெறுவதில்லை |
| • ஒலிப்பதிவு செய்து மீண்டும் பயன்படுத்துவதில்லை | • ஒலிப்பதிவு செய்து வேண்டிய இடத்தில் பயன்படுத்த முடியும் |
| • ஆற்றுகைக் கலைவடிவம் | • ஆற்றுகைக் கலைவடிவம் |
| • குரல்வழிச் சித்திரிப்பு காணப்படும் | • குரல்வழிச் சித்திரிப்பு காணப்படும் |
| • பார்ப்போர் அவசியம் | • பார்ப்போர் / கேட்போர் அவசியம் |

**நடனம்**

- ஒழுங்குபடுத்தப்பட்ட அசைவுகளின் அழகியல் நிலைப்பட்ட வடிவாக்கமே நடனம் ஆகும்.
- நடனம் நாடகத் தயாரிப்பில் உயிரோட்டமான விடயங்களாக அமைகின்றது.
- அசைவுகள் வடிவாக்கம் செய்யப்பட்டு (Choreography) படிமம் ஒன்றினைத் தோற்றுவிக்கும்போது, அது கட்புல நிலையில் காத்திரமான விளைவினை உருவாக்கும்

| நாடகம் | நடனம் |
|---|---|
| • உரையாடலும் உரை சார்ந்த செய்கையும் முக்கியம் பெறும் | • நடனம் பிரதான ஊடகம் |
| • நால்வகைச் சித்திரிப்புக்களும் இடம்பெறும் | • உடல், உணர்ச்சி, காண்பிய வழிச் சித்திரிப்புக்கள் முக்கியம் பெறும் |
| • பாத்திரத்திற்கேற்ப வேடவுடை ஒப்பனையுடன் நிகழ்த்தப்படும். | • கவர்ச்சியான வேடவுடை, ஒப்பனை காணப்படும் |

(09 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

3. i. **சித்திரிப்பு முறைகளில் ஊமச் சித்திரிப்பு என்றால் என்ன?**

- வாய்மொழியைப் பயன்படுத்தாது காண்பிய உணர்ச்சி, உடல் மொழி என்பவற்றுக்கு ஊடாக, குறிப்பாக உடல் மொழியைப் பிரதானமாகக் கொண்டு பார்ப்போருக்கு விளங்கும் வகையில் செய்யப்படும் நடிப்பு முறையாகும்.

(02 புள்ளிகள்)

ii. **ஊமச் சித்திரிப்பு வேறு சித்திரிப்பு முறைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?**

- ஊமச் சித்திரிப்பில் நடிகனது உடலே முதன்மையானது.
- உடலுடன் உணர்ச்சிகளும் முக்கிய பங்கை வகிக்கின்றன.
- ஊமச் சித்திரிப்பிற்கு இசை முக்கியமானதாகும்.
- ஊம நடிகன் தனது முகத்திற்கு வெண்ணிறப் பூச்சை ஒப்பனையாகப் பயன்படுத்தியிருப்பான்.
- தட்டுமுட்டுகள்.

(வேறு பொருத்தமான விடைகளையும் பரிசீலித்துப் நான்கைக் குறிப்பிடின் 4 புள்ளிகள் வழங்கலாம்)

(04 புள்ளிகள்)

iii. **பாத்திரச் சித்திரிப்பு என்றால் என்ன என்பதையும் அச் சித்திரிப்பில் நால்வகைச் சித்திரிப்புக்களும் பயன்படும் முறையை விளக்குக?**

- "நடிகன் நால்வகைச் சித்திரிப்புகளையும் பயன்படுத்தி பாத்திரத்தின் பண்புகளைப் பார்ப்போர் முன் கொண்டு செல்லுதல் பாத்திரச் சித்திரிப்பு எனப்படும்" என்ற விடயத்தை மையப்படுத்தி அளிக்கப்படும் விடைகளைப் பரிசீலித்துப் புள்ளி வழங்கலாம்.

- உடல்வழிச் சித்திரிப்பின் ஊடாகப் பாத்திரத்தின் பௌதிகவியற் பண்புகள் வெளிக்கொணரப்படும். மெய்நிலைகள், செயலியக்கங்கள் போன்றவை உடல்சார்ந்த சித்திரிப்பாக அமைகின்றன.

- குரல் வழிச் சித்திரிப்பின் வழியாகப் பாத்திரத்தின் பேச்சுப் பாணி மற்றும் பாத்திர உணர்ச்சிகள் மற்றும் உளவியற் பண்புகள் வெளிப்படுத்தப்படும்.

- காண்பியவழிச் சித்திரிப்பின் மூலம், அதாவது பாத்திரத்தின் வேட உடை, ஒப்பனை, கைப்பொருள்கள் என்பனவற்றின் ஊடாகப் பாத்திர சமூகவியற் குணாம்சங்கள் வெளிப்படுத்தப்படும்.

- உணர்ச்சிவழிச் சித்திரிப்பின் வழியாகப் பாத்திர உணர்ச்சிகள் வெளிக்கொணரப்படும்.

போன்ற விடயங்களை உள்ளடக்கியதான விடையிறுப்பைப் பரிசீலித்துப் புள்ளி வழங்கலாம்.
பாத்திரச் சித்திரிப்பு பற்றிய விளக்கத்திற்கு 02 புள்ளிகள்
நால்வகைச் சித்திரிப்புக்களின் பயன்பாடு பற்றிய விளக்கத்திற்கு 04 புள்ளிகள்.

(06 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

4. i. **நாடக எழுத்துரு ஒன்றில் காணப்பட வேண்டிய அடிப்படை அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?**

- சொல்லாடல்
- செயல்
- எண்ணக்கரு
- மோதுகை
- கதைக்கரு
- மொழி
- விடயப்பொருள்
- பாத்திரங்கள்.
- மேடைக்குறிப்பு

இவை போன்ற மூன்று விடயங்களை எழுதியிருப்பின் 3 புள்ளிகளையும் வழங்கலாம்

(03 புள்ளிகள்)

ii. **கதை ஒன்றினை நாடகமாக்கும்போது கையாளும் நுட்ப முறைகள் நான்கினைக் குறிப்பிடுக?**

- கதையிலுள்ள நாடகப் பண்புள்ள சூமமைவுகளை விளங்கிக் கொள்ளல்.
- தொடக்கம் நடு முடிவு என்பதை விளங்குதல்.
- சம்பவ ஒருமைப்பாட்டை விளங்குதல்.
- தர்க்கரீதியான தொடர்பை இனங்காணல்.
- பாத்திரங்களைத் தெரிவு செய்தல்.
- நீக்கல், சேர்த்தல், மாற்றியமைத்தல் என்ற பணிகளை தேவை ஏற்படின் செய்தல்.

(04 புள்ளிகள்)

iii. **கொரனா வைரஸ் தொற்று நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான விழிப்புணர்வு நாடகம் ஒன்றை எழுதுங்கள்?**

- மாணவர் அனுபவம்
- நாடகத் தலைப்பு
- நாடகக் கரு
- கதைக் கட்டமைப்பு
- பாத்திரங்கள்
- மோதுகை
- செய்தி என்பனவற்றை கவனத்தில் கொண்டு விழிப்புணர்வைத் தூண்டுகின்ற வகையில் எழுதப்பட்டிருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

(05 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

5. **“ஆரொடுநோகேன்” எழுத்துரு ஊடாக வெளித்தெரியும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விடையளிக்குக.**

i. **நாடகத்தின் கரு**

- கட்டிளமைப் பருவத்து மாணவர்களது கல்விசார், சமூகம் சார் மனவெழுச்சிகள்.
- பெற்றோர் தம் பிள்ளைகளின்பாற் கொண்டுள்ள அன்பின் நிமிர்த்தமாய் கல்விக்காகத் தம்மையறியாது தாமும் வருந்தி பிள்ளையையும் வருத்தும் வெளிப்பாடு.

(02 புள்ளிகள்)

ii. **நாடகத்தின் கதை**

மூன்று குடும்பங்கள். ஒவ்வொரு குடும்பத்தின் பிரச்சினையும் அன்பிலேயே ஆதாரப்பட்டு நிற்கிறது. முதல் குடும்பத்தில் பெற்றோர் காட்டும் அதீத அன்பினால் சங்கரி தனது சுயம் மறுக்கப்படுவதாய் உணர்கிறாள். இரண்டாம் குடும்பத்தில் அன்பு அதிகார நிலைப்பட்டதாக வெளிப்படுகிறது. தந்தையின் இத்தகைய அணுகுமுறையினால் ரஜீவும் சீலாவும் அதிருப்தியுறுகிறார்கள். மூன்றாவது குடும்பத்தில் சுயாதீனத்திற்கான இடம் அதிகமாகவே இருக்கிறது. ஆனால், தனது சுதந்திரமான சிறகடித்தலுக்குப் பெற்றோர் காட்டும் அன்பு இன்னும் வேண்டும் என்று அம்பிகை எதிர்பார்க்கிறாள். இந்தப் பிள்ளைகள் யாவரும் இணைந்து தமது விருப்பங்களைப் பெற்றோருக்கு அமைதியான முறையில் உணர்த்த முற்படுகிறார்கள்.

இத்தகைய விடயங்களை மையப்படுத்தி விடையளிக்கப்பட்டிருப்பின்

(02 புள்ளிகள்)

iii. **பாத்திரப்படைப்பு**

**அ. அம்பிகை**

- பாடசாலை மாணவி
- பிடிவாதக்காரி
- தனது விருப்பதத்திற்கேற்ப வாழ விரும்புபவள்
- தந்தையின் சொல்லுக்கு மதிப்பளிப்பவள்
- தாழ்வு மனப்பாங்கு கொண்டவள்
- தனது சகோதரி தனக்கு உதவி செய்ய வேண்டும் என நினைப்பவள்
- அனைவரும் தன்னில் அன்பு செலுத்தி நடக்க வேண்டும் என கருதுபவள்
- வெடுக்கென்று பேசுபவள்

யாதாயினும் நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பின் 4 புள்ளிகள் வழங்குக.

(04 புள்ளிகள்)

**ஆ. ஷங்கரி**

- பாடசாலை செல்லும் மாணவி
- பெற்றோர்களது அளவற்ற அன்பால் பாதிக்கப்படுபவள்
- தனது காரியங்களைத் தாமே செய்ய வேண்டும் என நினைப்பவள்
- தாமே சுயமாக முடிவெடுக்கவும், தமது சொந்தக்காலில் நிற்கவும் விரும்புபவள்
- பெற்றோரைப் புரிந்து கொள்ள முடிந்தவள்
- பெற்றோரை மதிப்பவள்

யாதாயினும் நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டிருப்பின் 4 புள்ளிகள் வழங்குக.

(04 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

6.

i. **மரபு வழி நாடகங்கள் எனக் கொள்ளப்படும் கூத்தின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- ஆடலே அரங்காக அமையும் கலை வடிவம்.
- பாத்திரங்களை சபையோர் அல்லது கட்டியக்காரன், அல்லது தம்மைத்தாமே அறிமுகம் செய்யும்.
- படர்க்கைமுறையுடன் எடுத்துரைக்கும் பண்பும் காணப்படும்.
- அண்ணாவி முறை காணப்படும்.
- பாடல் அமைப்பு காணப்படும்.
- அபிநய அமைப்பு காணப்படும்.
- மேடை அமைப்புமுறை (வட்டக்களரி) காணப்படும்.
- பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வருவது.
- தாளக்கட்டு அமைப்பு காணப்படும்.
- நடிப்பு, வேடவுடை, ஒப்பனை மோடிமைப் படுத்தப்பட்டதாகக் காணப்படும்.
- பெரும்பாலும் புராண இதிகாசக் கதைகள் ஆடப்படும்.
- கதை சபையோரால் வளர்த்துச் செல்லப்படும்.
- சமயச் சடங்கும், சமூகப்பண்பாட்டோடும் இணைந்ததாகக் காணப்படும்.
- மத்தளமும், சல்லரியும் இசைக் கருவியாகப் பயன்படும்.
- வட்டக்களரியில் ஆடப்படும்.

இவை போன்று நான்கு இயல்புகளைக் குறிப்பிட்டிருப்பின் 4 புள்ளிகள் வழங்குக.

(04 புள்ளிகள்)

ii. **பின்வரும் கூத்துக்கள் பற்றி குறிப்புக்கள் எழுதுக?**

**அ. காத்தவராயன் கூத்து**

- முத்துமாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது.
- எளிமையான சிந்து நடைப் பாடல்கள் காணப்படும்.
- காத்தவராயன் ஆரியப்பூமாலையை மணந்த கதை நிகழ்த்திக் காட்டப்படும்.
- உடுக்கை அதன் பிரதான இசைக்கருவியாகும்.
- படச்சட்ட மேடையில் ஆடப்படும்.

**ஆ. வசந்தன் கூத்து**

- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் ஆடப்படும்.
- வசந்த காலத்தில் ஆடப்படுவதனால் வசந்தன் கூத்து எனப் பெயர் பெற்றது.
- சித்திரை மாதத்தில் ஆடப்படும்.
- வசந்தராசன் கொலுவில் வந்திருக்க இக் கூத்து ஆடப்படும்.
- இதற்கென கதைப் போக்கு இல்லை.
- உழுதல், விதைத்தல், களை பிடுங்குதல், அருவி வெட்டுதல், பொலி காவுதல், பொலி தூற்றல் போன்ற வேளாண்மை தொடர்பான செயல்கள் யாவும் அபிநயித்துக் காட்டப்படும்.
- இரண்டு அடி கோல்களை தட்டியவாறு ஆறு அல்லது எட்டு அல்லது பன்னிரண்டு பேர் ஆடுவர்.
- ஆறுகம்பு வசந்தன், எட்டுக்கம்பு வசந்தன், பன்னிரண்டு கம்பு வசந்தன் என வகைப்படுத்துவதும் உண்டு.
- தென்மோடிக்குரிய ஆடல் கோலங்களும் காணப்படும்.
- கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது.
- கோயில் முற்றம் அரங்காகப் பயன்படும்.
- பார்ப்போர் சுற்றிவர இருந்து பார்ப்பர்.

**இ. காமன்கூத்து**

- மலையகத்தின் தேசியக் கூத்து என அழைக்கப்படும்.
- காமன் பண்டிகைகளோடு தொடர்புடையது.
- மாசி பங்குனி மாதங்களில் நிகழ்த்தப்படும்.
- காமன் கூத்தைப் பழக்குபவர் காமன் மாஸ்டர் எனப்படுவார்.
- மன்மதன் ரதியுடன் தொடர்புடைய கதை காணப்படும்.
- தெம்மாங்கு பண்புடைய லாவண்யப் பாடல்கள் இடம்பெறும்.
- தப்பு பிரதான இசைக்கருவியாகும்.
- காமன் பொட்டலில் நடத்தப்படும்.

**ஈ. கோவலன் கூத்து**

- முல்லைத்தீவுப் பிரதேசத்துக்குரிய தனித்துவமான கூத்துமரபு.
- கண்ணகி அம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது.
- வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் ஆடல், பாடல் சாயல்கள் காணப்படுகின்றன.
- பாடல்கள் அதிகம் தென்மோடிச் சாயலை உடையவை.
- "வஞ்சிப்பத்தன்" என்னும் பாத்திரத்தின் ஆடல் கோலம் தனித்துவமானதும் வேகமும் விறுவிறுப்பும் கொண்டது.
- மத்தளம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.
- இதனை "முல்லை மோடி" என்றும் தற்போது அழைக்கின்றனர்.

ஒவ்வொரு கூத்துப் பற்றியும் இரண்டு விடயங்கள் இருப்பின் 2 புள்ளிகள் வீதம் 8 புள்ளிகள் வழங்கப்படும்

(8 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**

7. **நவீன தமிழ் நாடக மரபின் பின்வரும் ஆளுமையினர் பற்றி குறிப்புக்களை எழுதுக?**

i. **பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை**

- இயற்பண்பு யதார்த்த வாதம் பொருந்திய நாடக வடிவத்தை உருவாக்கியவர்.
- 1936 முதல் இவரது நாடகங்கள் பல்கலைக்கழகத்தில் மேடையேறியது.
- யாழ்ப்பாண மத்தியதர குடும்பப் பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகளை நாடகமாக்கினார்.
- இவரது நாடகத்தில் யதார்த்தப் பாத்திரங்கள், பேச்சுமொழிகள் பயன்படுத்தப்படும். யாழ்ப்பாணப் பேச்சு மொழியைக் கையாண்டு நாடகங்களை எழுதினார்.
- இவரது நாடகங்கள் நா நாடகத்தொகுதி, இரு நாடகத் தொகுதியென வெளிவந்துள்ளன. அத்துடன் 10 நாடகங்களையும் உள்ளடக்கி நாடகத்திரட்டு வெளிவந்துள்ளது.

<u>நா நாடகத்தொகுதி - 1930</u>

உடையார் மிடுக்கு

முருகன் திருகுதாளம்

கண்ணன் கூத்து

நாட்டவன் நகரவாழ்க்கை

<u>இரு நாடகத்தொகுதி - 1952</u>

பொருளோ பொருள்

தவறான எண்ணம்

(நான்கு விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் முழுப்புள்ளிகள் வழங்கலாம்)

(04 புள்ளிகள்)

ii. **அ.தாஸிசியஸ்**

- மரபுவழி அரங்கின் பரிச்சயத்துடனும் ஐரோப்பிய அரங்கின் பரிச்சயத்துடனும் நாடகங்களை நெறிப்படுத்தினார்.
- மரபுவழி நாடகங்களில் நவீன அரங்கின் அம்சங்களையும் இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டின் முன்னோடியாகக் காணப்பட்டவர்.
- புதியதொரு வீடு நாடகத்தை எழுத மஹாகவிக்கு ஆலோசனை வழங்கியதுடன் அதனை நெறியாள்கையும் செய்தார்.
- பொறுத்ததுபோதும், கூடி விளையாடு பாப்பா, கோடை, காலம் சிவக்கிறது, பிச்சை வேண்டாம் போன்ற பல நாடகங்களை நெறிப்படுத்தினார்.
- சுவிஸ் நாட்டில் 'ஶ்ரீசலாமி' என்ற நாடகத்தை எழுதிப் பயிற்றுவித்தார்.
- பாண்டவர்களும் கிளவுஸ் முனிவரும் என்ற நாடகம் இவர் எழுதிய கூத்துருவ நாடகமாகும்.

(நான்கு விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் முழுப்புள்ளிகள் வழங்கலாம்)

(04 புள்ளிகள்)

iii. **க.பாலேந்திரா**

- 1980 களில் நவீன தமிழ் அரங்கை வளப்படுத்தியவர்களுள் ஒருவர்.
- 1973 களில் இருந்து நாடகம் தயாரித்து வருபவர்.
- அவைக்காற்றுக் கலைக் கழகத்தை நிறுவியவர்களுள் ஒருவர்.
- அவைக்காற்றுக் கலைக் கழகத்திற்கென இரசிகர் அவையை அமைத்தவர்.
- இந்திரா பார்த்த சாரதியின் மழை நாடகத்தை நடிகர் ஒன்றியத்திற்காக தயாரித்தார்.
- நெறியாளராகவும், நடிகராகவும், ஒளிவிதானிப்பாளராகவும், கவிஞராகவும் செயற்பட்டுள்ளார்.
- கண்ணாடி வார்ப்புக்கள், புதிய உலகம் பழைய இருவர், ஒரு பாலை வீடு, இடைவெளி, யுகதர்மம், முகமில்லாத மனிதர்கள், சம்பந்தம், அரையும் குறையும், பிரத்தியேகக் காட்சி, போகிற வழிக்கு ஒன்று, மரணத்துள் வாழ்வோம் போன்ற நாடகங்கள் இவரால் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம் செய்த நாடகங்களாகும்.
- வேடிக்கை, கிரகங்கள் மாறுகின்றன, தூரத்து இடிமுழக்கம், ஒரு யுகத்தின் விம்மல், அரசனின் புத்தாடை, படிக்க ஒரு பாடம் போன்ற பல நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார்.

(நான்கு விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் முழுப்புள்ளிகள் வழங்கலாம்)

(04 புள்ளிகள்)

**மொத்தம் 12 புள்ளிகள்**